# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office பின்புறம்),

**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590

**<u>ஆணை நாள் 13.05.2026</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். NC 1572/விசாரணை/E/2023 (SA 11917/F/2023 - WP No.27516/2023)</u>**

| | | |
|---|---|---|
| திரு A.S.சாதிக்பாஷா | .. | மேல்முறையீட்டாளர் |
| */எதிர்/* | | |
| | .. | பொது அதிகார அமைப்பு |

பொதுத் தகவல் அலுவலர்/
வக்ஃப் ஆய்வாளர்,
வக்ஃப் கண்காணிப்பாளர் அலுவலகம்,
எண்.8/124, காயிதே மில்லத் சாலை,
பாலக்கரை,
திருச்சிராப்பள்ளி - 620 008

******

**<u>ஆணை</u>**

1) இவ்வாணையத்தின் **26.11.2025** நாளிட்ட ஆணையில், வாலிகண்டபுரம் கிராமத்திலுள்ள பள்ளிவாசல் சொத்துக்களுக்கு வாடகைதாரர்களாக உள்ள 70 நபர்களது முகவரிகளை மனுதாரருக்கு வழங்க வேண்டுமென உத்தரவி
டப்பட்டிருந்தது.

2) அதனை தொடர்ந்து, திருச்சிராப்பள்ளி மாவட்ட வக்ஃப் கண்காணிப்பாளர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் இவ்வாணையத்திற்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில், ஆணையத்தின் உத்தரவுபடி, மேற்படி 70 நபர்களின் முகவரிகளை வழங்குமாறு வக்ஃப் வாரிய முத்தவல்லிக்கு 10.12.2025 அன்று கடிதம் அனுப்பப்பட்டதாகவும், அதற்கு வாலிகண்டபுரம் பரம்பரை முத்தவல்லி திரு எல்.ஜாபர் சாதிக் என்பவரின் வழக்கறிஞர் 11.04.2026 அன்று பதில் கடிதம் அனுப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டு, அக்கடிதத்தின் நகலும் இணைக்கப்பட்டுள்ளது.

3) மேற்படி முத்தவல்லியின் வழக்கறிஞர் எழுதியுள்ள கடிதத்தில், மனுதாரர் திரு ஏ.எஸ்.சாதிக்பாஷா தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் நோக்கத்தினை தவறாக பயன்படுத்திக் கொண்டு தனிநபரின் தகவல்களை பெற்று அதன் மூலம் அவர்களை அச்சுறுத்தி ஆதாயம் தேட முயற்சிக்கிறார் என்றும், மனுதாரர் கோரும் தகவல்கள் தகவல்

அறியும் உரிமைச் சட்டம் பிரிவு 8(d), 8(e) மற்றும் 8(1)(j) ஆகியவற்றின்படி விலக்களிக்கப்பட்ட தகவல்கள் என்றும், தனி நபர்கள் விலாசம் குறித்து தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு 8(1)(j)-ன்படி வழங்க இயலாது என மாண்பமை உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது என்றும், ஆகவே மனுதாரர் கோரும் தகவலை வழங்க இயலாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தகவல் மனுதாரருக்கு 16.04.2026 நாளிட்ட கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு, அதன் நகலும் மனுதாரர் அதை பெற்றுக் கொண்டு வழங்கிய ஒப்புகை அட்டையின் நகலும் இணைக்கப்பட்டுள்ளது.

4) இதனிடையே, மனுதாரர் 02.01.2026 நாளிட்டு ஆணையத்திற்கு எழுதியுள்ள எழுத்துமூலமான வாதுரையில், ஆணையத்தின் உத்தரவுபடி தனக்கு இன்னும் தகவல் வழங்கப்படவில்லை என்றும், தான் கோரிய தகவல்களை பெற்றுத் தர வேண்டுமென்றும் ஆணையத்தை கோரியுள்ளார்.

5) வழங்கப்பட்ட ஆவணங்களை பரிசீலித்த ஆணையம், வாலிகண்டபுரம் பரம்பரை முத்தவல்லி திரு எல்.ஜாபர் சாதிக் தனது வழக்கறிஞர் மூலம் மனுதாரர் கோரிய தகவல்கள் மூன்றாம் நபர் தகவல்கள் என தெரிவித்துள்ளதை ஆணையம் ஏற்கவில்லை வாலிகண்டபுரம் கிராமத்திலுள்ள பள்ளிவாசல் சொத்துக்களுக்கு வாடகைதாரர்களாக உள்ள 70 நபர்களது முகவரிகளை மனுதாரர் கோரியுள்ளார். அச்சொத்துக்கள் வக்ஃப் வாரியத்தால் நிர்வகிக்கப்படுபவை என்பதால், அவற்றில் வாடகைதாரர்களாக உள்ளவர்கள் குறித்த தகவல்கள் மூன்றாம் நபர் தகவல்கள் ஆகாது என்று இவ்வாணையம் கருதுகிறது. ஆகவே, மனுதாரர் கோரும் 70 வாடகைதாரர்களது முகவரிகளை திருச்சிராப்பள்ளி மாவட்ட வக்ஃப் கண்காணிப்பாளர் அலுவலக பொதுத் தகவல் மனுதாரருக்கு வழங்கிவிட்டு, அதன் நகலையும், மனுதாரர் அதனை பெற்றுக் கொண்டு வழங்கிய ஒப்புகை அட்டையின் நகலையும் இணைத்து ஒரு அறிக்கையாக இவ்வாணையத்தில் 19.06.2026 அன்று சமர்ப்பிக்க வேண்டுமென ஆணையம் உத்தரவிடுகிறது.

**ஒம்/- (பி.தாமரைக் கண்ணன்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

<u>**வழக்கு எண்.** NC 1572/**விசாரணை**/E/2023 (SA 11917/F/2023 - WP No.27516/2023)</u>

<u>**பெறுநர்**</u>

பொதுத் தகவல் அலுவலர்/ வக்ஃப் ஆய்வாளர்,
வக்ஃப் கண்காணிப்பாளர் அலுவலகம்,
எண்.8/124, காயிதே மில்லத் சாலை,
பாலக்கரை, திருச்சிராப்பள்ளி - 620 008

திரு A.S.சாதிக்பாஷா.
எண்.255-பி/15-சி, முதல் தளம்,
அஜீஸ் வளாகம், வடக்குமாதவி சாலை,
(உழவர் சந்தை எதிர்புறம்)
பெரம்பலூர் 621 212

Copy to: File
CR/PA